★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 மாசி 24 ஜ ஆகி 3 இதழ் 25
யாழ்ப்பாணம் புதன்கிழமை 7 3-84

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

# "வடக்கு, கிழக்கில் நடப்பது அரசுக்கு எதிரான யுத்தம்"

## அரச எம். பிக்கள் மத்தியில் ஜனாதிபதி

(இ. சுந்தரசாமி)

"வடக்கு, கிழக்கில் நடைபெறும் பயங்கரவாதம் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சதி முயற்சி. இது ஒரு யுத்தத்தைப் போன்றது" என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

நேற்றுக்காலை நடைபெற்ற அரச பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்னை தொடர்பான சர்வகட்சி மாநாடு சுமுகமான தொரு தீர்வுக்கு வந்தாலும் கூட பயங்கரவாதம் நிறுத்தப்பட்டுவிடும் என்று தாம் நினைக்கவில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# கொள்ளைச் சந்தேக நபர்கள் நல்லூரில் கடத்தல்!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிமன்றத்திலிருந்து யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு கொண்டுவரப்பட்ட இரு கைதிகள் நேற்று மாலை இரண்டு துப்பாக்கிநபர்களினால் கடத்தப்பட்டனர்!

நல்லூர் பஸ்தரிப்பு நிலையத்தில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட இரு நபர்கள், பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட போது, இருவரையும் யாழ்ப்பாணம் சிறைச்சாலை நிமாண்டில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து இரண்டு கைதிகளும் நேற்று பிற்பகல் வட பிராந்திய போக்குவரத்து சபை பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்படும்போது, நல்லூரில் திடீரென பஸ் மணிச்சத்தம் கேட்டு பஸ் நிறுத்தப்பட்டது என்றும், அப்போது பஸ்ஸிலிருந்த இருவர் கைத்துப்பாக்கி காண்பித்து, கொள்ளைச் சந்தேக நபர்கள் இருவரையும் கடத்திச் சென்றதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கைதிகள் இருவருக்கும் கை விலங்கிடப்பட்டபோதிலும் இவர்களை யாழ் சிறைச்சாலைக்குக் கூட்டிவந்த சிறைக் காவலர்கள் இருவரும் துப்பாக்கிகள் வைத்திருக்கவில்லை என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

## ● யாழ். ஐக்கிய வியாபார சங்கத்தில் நேற்றுமாலை நடந்தது:

# நகரில் பரபரப்பான நேரத்தில் துப்பாக்கி முனையில் கொள்ளை!

## கொள்ளையரை மடக்க முயன்ற முகாமையாளருக்குச் சூடு!!

[ஏ. வி. மாணிக்கம் — கே. யோகநாதன்]

**யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்க கொள்ளையின்போது அதனைத் தடுக்க முற்பட்ட சங்க பொது முகாமையாளரான கொடிகாமத்தைச் சேர்ந்த திரு. என். குமாரசாமி (64 வயது) துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானார். இவர் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டு அவசர சத்திரசிகிச்சைக்குட் படுத்தப்பட்டார்.**

இக்கொள்ளைச் சம்பவத்தின் போது, துப்பாக்கி இளைஞர்களால் நேற்று பிற்பகல் வரை சிகரட் விற்பனையால் பெற்ற பணம் கொள்ளையடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இச்சம்பவத்தை தொடர்ந்து காசாளர் விவேகானந்தன், பொலிசாரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

சுமார் 2000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

### துப்பாக்கியுடன் இளைஞர்கள்

நேற்று பிற்பகல் 4-30 மணியளவில் துப்பாக்கியுடன் வந்த 6 இளைஞர்கள் இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது

துப்பாக்கியுடன் 3 பேர் வெளியில் காவலுக்கு நிற்க சிகரட் விற்பனை பகுதிக்கு துப்பாக்கியுடன் 3 இளைஞர்கள் சென்றதாகக் கூறப்படுகிறது

### போங்கடா வெளியாலை என்றார்

அச்சமயம் மருந்துப் பகுதியில் திரு குமாரசாமி தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்ததை அவதானித்த இளைஞர்களில் ஒருவர் ஓடிச்சென்று தொலைபேசியை அவரிடமிருந்து பறித்து வைத்ததாகவும், அவர் "போங்கடா வெளியாலே பொய்த்துவக்கை காட்டி வெருட்டாதீர்கள்" என்று கூறிக்கொண்டு சிகரட் விற்பனைப்பகுதிக்கு சுற்றிவந்து கொள்ளையை தடுக்கமுற்பட்ட போது, ஒருவர், நெஞ்சை நோக்கி சுட்டதாக கூறப்படுகிறது. சூடுபட்டதும், அவர் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு நிற்க, மற்றவர்கள் பணப்பையை காசாளரிடம் பறித்துக்கொண்டு வெளியில் ஓடியதாகவும் கூறப்படுகிறது.

### சைக்கிளில் சென்றனர்

வெளியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளில், ஆறு பேரும் ஏறிச்சென்றதாகவும் இளைஞர்களில் ஒருவர் ரீசேட்டும் தொப்பியும் அணிந்திருந்ததாகவும் மற்றவர்கள் நீளக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்ததாகவும் கூறப்படுகிறது

உள்ளே மூன்று இளைஞர்

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசியல்வாதியும் மகனும் டாக்டரின் வீட்டில் தாக்குதல்!

(கொழும்பு)

கொழும்பு எலிபேங்க பிளேஸிலுள்ள டாக்டர் ஒருவரின் இல்லத்தின்மீது பிரபலமான அரசியல்வாதி ஒருவரும் அவரது மகனும் குண்டர் கோஷ்டியுடன்வந்து தாக்குதல் நடத்தியதாகப் பம்பலப்பிட்டி பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

டாக்டர் பி பி. என். ஜயசேகர என்ற மேற்படி டாக்டர் பொலிஸில் செய்துள்ள புகாரில், சம்பந்தப்பட்ட அரசியல் தலைவரின் மகன் முதலில் ஒரு கோஷ்டியுடன்வந்து தகராறு செய்ததாகவும், தனது நண்பர்களில் ஒருவரைத் தாக்கியதாகவும் தெரிவித்துள்ளார். சிறிது நேரத்தில் மேற்படி அரசியல்வாதியே ஒரு கோஷ்டிக்குத் தலைமைவகித்து வந்து தகராறு செய்ததாகவும், யன்னல்கள், மற்றும் பொருட்களை உடைத்ததாகவும் புகார் செய்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# "இலங்கை தமிழரின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்"

## இந்திய 'பார்வாட் புளக்' கட்சி கோரிக்கை

(கல்கத்தா)

இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் உரிமைகள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அகில இந்திய பார்வாட் புளக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கல்கத்தாவில் நடைபெற்ற கட்சியின் வருடாந்த மாநாட்டில் இலங்கைத்தமிழர் பிரச்னை தொடர்பான தீர்மானம் ஒன்றில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது

கடந்த ஜூலையில் தமிழர்கள் கொலை செய்யப்பட்டதையும் கட்சி இத்தீர்மானத்தில்பலத்த கண்டனம் தெரிவித்துள்ளதுடன் கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய துறைகளில் தமிழ் மக்களுக்கு பாரபட்சம் காட்டக்கூடாது என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கு)

# வவனிக்குளம் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் ஆபத்து

## மக்கள் வெளியேறுகிறார்கள்

[கொழும்பு]

வவனிக்குளம் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் ஆபத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் வவனிக்குளத்திலும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதால் பாலியாற்றுப் பகுதியிலும், வவனிக்குளம் பகுதியிலும் வசிப்பவர்களைப் பாதுகாப்பானஇடங்களுக்குச் செல்லுமாறு முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

## விவசாயப் பயிற்சி இன்று நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

விலைமதிப்புள்ள செற்றி விற்பனைக்குண்டு, மாலை ஐந்து மணிக்குப் பின்னர் பார்வையிடலாம். 74, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1176

உரும்பிராய் சிவன் வீதியில் 5 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு தென்னை மரங்கள் உண்டு. விபரங்களுக்கு உடன் நேரில் வரவும். தேவதிரவியம், சிவன் வீதி உரும்பிராய். 1193

மட்டுவில் கலைமகள் வித்தியாசாலைக்கு அருகில் சுமார் 100 பாருக்குள் 10 பரப்பு தென்னந்தோட்டம் இணைற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. ஜெகராசசேகரன், விஸ்வர் வளவு, சரசாலை, வி. குணசேகரன், லீலா ஸ்ரோர், சுன்ணாகம். 1195

நீர்வேலி வடக்கில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், காளி கோவிலுக்கு அருகாமையில் (½) அரைப்பரப்புக் காணியும் குடியிருப்பதற்கும், கடைக்கும் ஏற்ற கட்டிடம் சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: லீலா ஸ்ரோர் சுன்ணாகம் அல்லது க.சின்னத்தம்பி (அப்பாத்துரை) ஸ்ரீ முருகன் சோடா உரிமையாளர், நீர்வேலி, வடக்கு, நீர்வேலி. 1196

பைரஹா பாம்ஸ் ஒருநாள் ஹபுரோ புரோயிலர் இறைச்சிக் கோழிக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். ஹைசெக்ஸ் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவல் குஞ்சுகள் 12-3-84இல் விநியோகிக்கப்படும். ஹைசெக்ஸ் ஒருமாத பேட்டுக்குஞ்சுகள், சேவல்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ந.சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 1129

## விற்பனைக்கு

தனி ஒருவர் பாவிப்பில் இருந்த ஒப்பில் றக்காட் வான் 3 சிறீ 459 விற்பனைக்குஉண்டு நேரில் வந்து பார்வையிடலாம் க. விஸ்வநாதன், குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழை. 1178

வவுனியா பகுதியில் நெல் உழுந்து, வெங்காயம், மிளகாய் செய்யகூடியதும் கால்நடை வளர்க்கக்கூடியதுமான 50 ஏக்கர் விற்பனைக்கு உண்டு விபரம்; சதா கிறீம் கவுஸ் கோவிலடி சாவகச்சேரி. 1127

## சேவை

வெளிநாடு போக ஆவலுடன் துடிக்கிறீர்களா? Factory லேபரர்களாக டிரைவர்களாக மத்திய கிழக்கு போக நாம் இலகுவழி காட்டுகிறோம். முத்திரையும் விலாசமும்கூடிய கடித உறையுடன் உடன் தொடர்பு கொள்ளவும். The Director, P. O. Box: 1967 Colombo. 1128

## பயிற்சி

செய்முறையுடன் எலக்றிக்கல் வயறிங் இரண்டு மாத பயிற்சி 12-03-1984ல் ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி 11 B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் 1151

றேடியோ - டெலிவிசன் மூன்றுமாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்: 14-03-1984. அனைவரும் சேரலாம்-நேரில் வரவும். நாஷனல் அக்கடமி (விவேகானந்தா அச்சகம் முன்பாக) 11, மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1174

## WANTED

Female typist clerk, Gas Welders Lathemen's Moulder's Call personally Radhakrishna's 392, NavalarRoad, Nallur, Jaffna. 1183

## தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரேயஸ் டிஸ்பென்ஸறிக்கு நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. நேரில் வரவும். 1179

றீடச்சிங், பினிசிங் என்பவற்றில் அனுபவமுள்ள ஒருவரும், காசாளர் ஒருவரும் தேவை. கோரும் சம்பள விபரத்துடன் விண்ணப்பிக்கவும். லிங்கம் ஸ்ரூடியோ, காங்கேசன்துறை. 1178

வர்த்தக வருமான கணக்குகள் எழுதுவதில் திறமையும் அனுபவமுமுள்ள ஆள் பகுதிநேர வேலைக்கு தேவை. உடன் விண்ணப்பிக்கவும். ஸ்ரேயஸ் டிஸ்பென்ஸறி, யாழ்ப்பாணம். 1180

பருத்தித்துறையிலுள்ள ஆங்கில வைத்திய டிஸ்பென்சரிக்கு பெண் உதவியாளர்கள் உடன் தேவை 15-3-84க்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1184 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம் 1184

## வகுப்புகள்

I C M A செக்ஷன் A நவெம்பர் 84பரீட்சைக்குரியதிருத்திய பாடவிதானப்படி புதிய கணக்கியல்முறையை உள்ளடக்கும் விசேட வகுப்பு ஆரம்பம் 17-3-84, மனுக்கள் 16-3-84க்குமுன்னர். விபரங்கட்கு: வன்னியசிங்கம் M. Sc (Econ) (Lond) Bcom(Lond), வைரவர் கடாட்சம், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 24424. [1123]

## ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 222, கே. கே. எஸ். வீதி திருமதி ச பரமு அவர்களிடம் 1-4-81 தொடக்கம் 15-2-83வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 28-3-84 காலை பத்து மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து ஏலத்தில் விற்கப்படும்.

கு. இராஜகோபால்,
ஏலவிற்பனையாளர்.
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 1191

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1984

துரித மீட்டல் வகுப்புகள்

84ம் ஆண்டு பரீட்சைக்கான துரிதமீட்டல் வகுப்புகள் 14-3-84ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப்பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

அதிபர்
தொலைபேசி எண்: 22617.
876, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 1085

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## சாரதிகள், தொழிலாளர்கள் தேவை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடற்றொழில் தொடர்புள்ள வியாபாரத்தில் ஈடுபடும் ஒரு ஸ்தாபனத்திற்கு அனுபவம் உள்ள சாரதிகள் (Heavy Vehicles) தொழிலாளர்கள் (Labourers) தேவைப்படுகின்றனர். விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 1187
மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம்.

1187

## பிறந்ததின வாழ்த்து

அனுஷா - பரமேஸ்வரன்



யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி, நாவலர் ஒழுங்கையைச் சேர்ந்த பரமேஸ்வரன் வசந்தகுமாரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி செல்வி அனுஷா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, மற்றும் உறவினர்கள் யாவரும் அருள்மிகு ஸ்ரீ வராகி அம்மன் அருள் பெற்று சீருஞ் சிறப்புடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். 924

# HOME FINANCE LIMITED

## FOR SALE

NEWLY IMPORTED NISSAN CARAVAN
6 SEATER DIESEL DELIVERY VAN

1979/80 Model
Reconditioned in Japan.
Finance available.
Apply to:
HOME FINANCE LTD.,
82, KANNATHIDDY ROAD,
JAFFNA.

## கணக்கியல்/முகாமையியல் பயிலுநர்கள்

## Trainees in Accountancy and Management

பிரபல கணக்காளர் பயிற்சி நிறுவனம் கணக்கியல் கணக்காய்வு, முகாமையியல் ஆகியவற்றில் பயிலுநர்களுக்கான விண்ணப்பங்களைக் கோருகிறது. மேலதிக விபரங்களுக்கு 20-03-84க்கு முன்னர் தபால்மூலமாகவோ அல்லது நேரிலோ தொடர்புகொள்ளவும்.

## Management Information Service

68, Kannathiddy Road, Jaffna.
Telephone - 22519 1188

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## ஆறுமுகம் சாந்தலிங்கம்

(ஆசிரியர், ஆனைக்கோட்டை)

தோற்றம்: 23-10:1929 மறைவு: 8-2-1984



8-2-1984 அன்று எமது இல்லத்தில் நடைபெற்ற மரணச் சடங்கில் நேரடியாக கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்க்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மற்றும் சகல வழிகளிலும் உதவி செய்த எல்லோருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் 8-3-84 அன்று காலை கீரிமலையிலும், வீட்டிலும் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கு மாறு அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள்.
68, அரசடி, ஆனைக்கோட்டை. 1185

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி சுபத்திராதேவி புவனேஸ்வரன்

(சுருக்கெழுத்தாளர், ப. பி போ. ச. பருத்தித்துறைச் சாலை)

தோற்றம்: 27-06-1942 மறைவு: 08-02-1984



08-02-1984ல் இறைவனடி யெய்திய எனது அன்பு மனைவி சுபத்திராதேவி அவர்களின் இறுதிச்சடங்கில் நேரிலும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் பல விதத்திலும் உதவிகள் புரிந்தும் பங்கு கொண்ட அனைவருக்கும், முக்கியமாக பருத்தித்துறைச் சாலை ஊழியர்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை 09-03-84 காலை 9-30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறுவதால் தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

(கணவன்) சீனிவாசகம் புவனேஸ்வரன்
(சுருக்கெழுத்தாளர் ப.பி போ.ச. யாழ்ப்பாணம்)
(பிள்ளைகள்) தர்மயாகினி, இரவிச்சந்திரன், புவனேந்திரன்.
தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை. 1186

# இஸ்ரேல் - லெபனான் ஒப்பந்தம் ரத்து!

## சிரியா ஜனாதிபதி மகிழ்ச்சி

## இஸ்ரேல் கண்டனம்

பெய்ரூட். மார்ச். 6

இஸ்ரேலுடன் கடந்த மே மாதம் 17ம் திகதி செய்துகொண்ட ஒப்பந்தத்தை லெபனான் ரத்துச் செய்துள்ளது. லெபனானின் இந்நடவடிக்கையை இஸ்ரேல் கண்டனம் செய்துள்ளது.

சிரியாவின் பயமுறுத்தலுக்குப் பயந்தே லெபனான் இந்த ஒப்பந்தத்தை ரத்துச்செய்ததாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. லெபனான் மீண்டும் இஸ்ரேலுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அதன் இறைமையைப் பாதுகாக்க வேண்டுமென்று இஸ்ரேலியப்பிரதமர் ஷமீர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை லெபனான் இஸ்ரேல் ஒப்பந்தம் ரத்துச்செய்யப்பட்டமை அரபு உலகிற்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும் என்று சிரியா ஜனாதிபதி ஹாபி-ஸ் அசாத் தெரிவித்துள்ளார்.

சிரியா லெபனானின் இறைமையையும், பாதுகாப்பையும் தொடர்ந்தும் பேணிவருமென்றும் அவர் உறுதியளித்துள்ளார். (வெ)

# வாக்களிப்பில் 'எலக்ரோனிக்' இயந்திரம் தேர்தல் செல்லுபடியாகாது;

## இந்திய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

புதுடில்லி, மார்ச். 6

கேரள மாநிலத்தின் பாரூக் தொகுதி சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தல் செல்லுபடியாகாதென்று இந்திய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது.

இங்குள்ள 50வாக்குச்சாவடிகளில் வாக்களிப்பிற்கு எலக்ரோனிக் இயந்திரம் பயன்படுத்தப்பட்டமையினாலேயே இத்தேர்தல் செல்லுபடியாகாதென்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் இந்திய தேர்தல் கமிஷனுக்கு இல்லையென்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இத்தேர்தலில் தான் முதன்முறையாக எலக்ரோனிக் இயந்திரம் வாக்களிப்பிற்குப் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [வெ]

# மேற்கு ஜெர்மன் அதிபர்

## அமெ. வெளி. அமைச்சர் சந்திப்பு

வாஷிங்டன். மார்ச். 6

மேற்கு ஜெர்மன் அதிபர் திரு. ஹெல்மட்ஹோல் அமெரிக்கவெளிநாட்டமைச்சர் திரு, ஜோஜ் ஷுல்ஸை வாஷிங்டனில் சந்தித்து நேற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தச்சந்திப்பின் போது திரு. ஹோல் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரம், ஆயுதக்கட்டுப்பாடு ஆகிய விடயங்களிலும்பார்க்க கிழக்கு மேற்கு உறவே முக்கியமானது என்று வலியுறுத்தினதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க விஜயத்திற்கு முன்னர் சோவியத் ஜனாதிபதி திரு. ஷெனன்கோவைசந்தித்த திரு ஹோல் புதிய சோவியத் ஜனாதிபதி முன்னெச்சரிக்கையாக இருப்பதுடன் அவர்சமாதானத்திற்கு முரணாக நடக்கமாட்டாரென்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

மேற்கு ஜெர்மன் அதிபர் ஹோல் அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனால்ட் றீகனையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். [வெ]

## திரைப்பட நடிகர் காலமானார்

(கொழும்பு)

சிங்களத் திரைப்பட நடிகர் சேனதீர குறுப்பு காலமானார். 55 வயது நிரம்பிய இவர் பல திரைப்படங்களில் நடித்துள்ளார்.

# துப்பாக்கி முனையில் குருநகரில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

சம்மாட்டியாரோடு மீன் பிடிக்கப்போகிறோம்; துரை இருக்கிறாரா? கதவைத் திறவுங்கோ'' எனக்கேட்டு உள்புகுந்தவர்கள், கைத்துப்பாக்கி, வாள், கத்தி ஆகிய ஆயுதங்கள் முனையில் பயமுறுத்தி 15,302 ரூபா ரொக்கப்பணத்தையும் பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

குருநகரைச் சேர்ந்த றோஸ் மலர் சிறில் மைக்கேல் என்பவரின் வீட்டில் இக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

மைக்கேல் என்பவரின் சகோதரர் துரை என்பவர் அவ் வீட்டிலேயே தங்கியிருப்பதை அறிந்து சம்பவதினம் இரவு அரைக்காற்சட்டை அணிந்த மூன்று நபர்களும், நீளக் காற்சட்டை அணிந்த ஒருவரும் கதவில் தட்டி துரை என்பவரை அழைத்ததாகவும் வீட்டுக்காரர் கதவைத் திறக்கவே கொள்ளையர்கள் உட்புகுந்து ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி கொள்ளையடித்துச் சென்றதாகவும் யாழ் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

யாழ் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் முத்துத்தம்பி சார்ஜன்ட்டுகள் எட்வேட், பி சின்னத்துரை ஆகியோரைக் கொண்ட பொலிஸ் கோஷ்டி விசாரணை மேற்கொண்டுள்ளது. (மா)

## கடும் மழை மூவர் பலி!

சென்னை மார்ச் 6.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடும் மழை காரணமாக ஜீப் வண்டியொன்று நீரினால் அடித்துச் செல்லப்பட்டதாகவும், இதனால் மூன்று பேர் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டது. (வெ)

# இந்துமாக்கடலில் இராணுவ நடவடிக்கைகள் அதிகரிப்பு!

## சோவியத் யூனியன் - இந்தியா கவலை

புதுடில்லி, மார்ச் 6.

இந்துமாக்கடலில் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்து வருவது குறித்து சோவியத் யூனியனும், இந்தியாவும் கவலை தெரிவித்துள்ளன.

''இந்தியா அதன் பாதுகாப்பு வசதிகளை வலுப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தியாவின் அண்டைப் பகுதிகளில் நவீனரக ஆயுதங்கள் புகுத்தப்பட்டு வருவது குறித்து இந்தியா விழிப்புடன் இருக்க வேண்டும்''

இவ்வாறு சோவியத் பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் உஸ்ரினோவ் இந்தியபாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவருக்களித்த விருந்துபசாரத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

இந்திய பாதுகாப்பமைச்சர் திரு. வெங்கட்ராமன் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது!

''அணு ஆயுதப்பூசலை ஒழிப்பதற்கு அணிசேராநாடுகள் இயக்கத்தலைவி திருமதி இந்திராகாந்தி பெருமுயற்சி எடுத்து வருகிறார்.

''இந்திய — சோவியத் பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் வளர வேண்டும்', என்றார்.

சோவியத்யூனியன் இந்தியாவிற்கு வழங்கிவரும் பாதுகாப்பு ஒத்துழைப்பிற்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

உ

முருகா

# வாடிக்கையாளருக்கு முக்கிய அறிவித்தல்

S. சரவணபவன்
எரிபொருள் நிரப்பு நிலையம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

லக்ஸ் சிவா சேல்ஸ் பேர்ச்சஸ் லிமிட்.
எரிபொருள் நிரப்பு நிலையம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மேற்காட்டிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கீழ்க்குறிப்பிடும் விலையில் எரிபொருள் விற்பனை செய்கின்றோம் என்பதை அறியத்தருகின்றோம்.

1 லிற்றர் சுப்பர் ரூபா 14/-

1 லிற்றர் டீசல் ரூபா 8/90.

குறிப்பு:

S. சரவணபவன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில்

ஒரு லிற்றர் மண்எண்ணை 7/20 சதப்படி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைசெய்கின்றோம்.

(கூட்டுஸ்தாபன கரத்தைகளுக்கும் (வண்டில்களுக்கும்) மண்எண்ணை விநியோகிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.)

### மணிவாக்கு

பழைய நோய் ஒன்றைக் குணப்படுத்தும் முயற்சியில் நூறு புதிய நோய்களை உற்பத்தி செய்துவிடுகிறோம்.

—மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## மருந்துத் திருட்டு மூன்றாவது முறை

தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும் என்பார்கள்.

யாழ். பெரியாஸ்பத்திரி மருந்தகத்திலிருந்து அடுத்தடுத்து மூன்றாவது தடவையாக பெறுமதியானமருந்து வகைகள் களவாடப்பட்டிருக்கின்றன. அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பிலும் இது நடைபெற்றிருக்கிறது.

களவுகள் இங்கு சாதாரணமானாலும், 'சமூகத் துரோகிகள்' என்ற குற்றம் சாட்டப்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டாலும், இவ்வித திருட்டுக்கள் எவ்வாறு தொடர்கின்றன என்பதை ஆராய்ந்து உடனடியாக நிறுத்தப்படவேண்டும். திறமைசாலிகள் உதவவேண்டும்.

இலவச மருத்துவசேவை இவ்வித அட்டூழியத்தால் எவ்வாறு ஒதுக்கப்படுகிறதென்பதை உணரவல்ல சமுதாய மனச்சாட்சி இன்று எம்மத்தியில் மருந்துக்குமில்லையெனலாம். இந்த நோய்க்கு மருந்துகாண முடியுமானால் பலநோய்கள் பகலவனைக்கண்ட பனிபோல நீங்கும்.

பாடசாலைகளிலிருந்து திருடப்படும் சொத்துக்கள். இலவசக்கல்விக்கு இடுக்கண்; போக்குவரத்துசேவை தொழிற்சாலையிலிருந்து திருடப்படும் சொத்துக்கள் நாட்டின் சீ. ரி. பி., சீ ஜீ ஆர். சேவைகளைக் குட்டிச் சுவராக்குகின்றன. கூட்டுறவுச்சங்க விற்பனை நிலையங்களிலிருந்து வெளியேறும் பொருள்கள் சாதாரண பாவனையாளரின் வயிற்றில் அடிக்கின்றன.

இவ்வாறு பொதுநல சேவையைச் சூறையாடி கறுப்புச் சந்தையில் இவற்றை விற்றுப்பிழைக்கும் பிரஜைகளை நாம் என்னென்று வர்ணிப்போம்?

எவ்வித சமுதாய அமைப்பிலும்-முதலாளித்துவ அல்லது சோஷலிச-இவ்வித திருட்டுக்கள் இடம்பெறுவதில்லை. பண்பற்றமனிதர்-மற்றவர் துன்பங்களில் பிழைக்கலாமென்று நம்புபவர்கள் எங்கும் உண்டு; ஆனால் இன்று மலைபோல் உயரும் ஊழலும் மோசடியும் கட்டுப்பாடற்ற பொருளாதார அமைப்பில் இவ்வாறு அதிகரிப்பதில் என்ன அதிசயம்?

தாலிக் கொடியைப் பறித்து அதனைக் காசாக்குவது இவற்றைவெனக்கணிக்கும் நிலை வந்துவிட்டது.

மருந்துத்திருட்டு ஒரு புதிய தினுசாகத் தெரிகிறது. அதனைக் கொள்வனவு செய்பவர்கள் அத்துறையில் நுண்ணறிவுடையவர்களாக வேண்டும். அசுர வேகத்தில் ஏறிய விலையுடைய மருந்துகள் மலிவாகக் கிடைக்குமானால் இன்றைய வியாபாரக் [illegible] தவறோ?

தனியார் மருந்தகங்கள், மருத்துவ மனைகள் பல தேநீர்க் கடைபோல் நகரமெங்கும், காளான் போல் நிலைக்க முளைக்கின்றன. களவுபோன மருந்துகள் ஒழுங்கற்ற ஸ்தாபனங்களில் அனுமதி பெறலாமென்று நம்புவதில் என்ன தவறு?

பண்பட்ட சமூகத்தின் செல்வர் ஒருவரை மருந்துக்கு உதவும் மரமென வர்ணிக்கிறார் தமிழ் முனிவர். மருந்துக்கு உதவும் மரம் தன் இலை, பழம், பட்டை, வேர் அனைத்தும் மக்களின் நோயைத் தீர்த்துத்தர உதவும்.

புண்பட்ட சமூகத்தில் வாழும் ஒருவன் சமூகத்துக்கு கஷ்டம் உண்டுபண்ணும் வகையில் மருந்தைக் கொள்ளையடிக்கும் மரமாகின்றான்.

இவ்வித கொள்ளை எங்குந்தான் நடைபெறுகிறதென்று சமாதானம் கூறுவோர், இக்கொடிய செயலைக் கண்டித்து ஆவனசெய்யும் ஆற்றல் அற்றவர்களே!

கொள்ளையர் கூட்டம் என்பது ஒரு சிலரே; ஆனால் இவர்களை அடக்கி நிறுத்த வல்ல பொதுஜன உணர்வுக்கு உதவ முடியாத பசி சோற்றுப் பிராணிகள்தான் சமூகத்தின் சாபக்கேடு.

எவ்வகையிலும் பொருள் திரட்டத் துணிந்தவருக்கு செக்கென்ன சிவலிங்கமென்ன?

இத்தகைய சுவர் மத்தியில் வாழும் நாம். இந்த இழி நிலையை ஒழிக்க முன்வராவிடில் காட்சிபோன்ற பேரம் பேசுவதில் என்ன அர்த்தம் உண்டு?

யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரி இம் மாவட்டத்தின் உயிர் நிலையம், சாகும் தறுவாயில் உடனடி சிகிச்சைக்கு விரையும் நோயாளிகள் எத்தனைபேர்! இவ்வித கொள்ளையால் ஸ்தம்பிக்கப் போகும் மருத்துவ சேவை அவர்களுக்கு யமனாகிறதென்பதை உணரமுடியாத சமுதாயத்துக்கு யாரும் உதவ முன்வருவாரா?

அது மட்டுமல்ல, களவாடப்பட்ட விலை உயர்ந்த மருந்துகள் பல அபாயமானவை; வைத்திய நிபுணரின் கட்டளைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உரித்தானவை. இவற்றை பொறுப்பின்றி விற்பனை செய்யும் மருந்தகங்கள் பயங்கர ஸ்தாபனங்கள் என்பதும் நாமறிந்திருக்க வேண்டும்.

அது எவ்வாறாயினும் சாண் ஏற முழஞ் சறுக்கு மென்றவகையில் இப்பெரிய மருத்துவநிலையம் அவப்பெயரெடுக்காமல் மக்களுக்கு மதிப்பானசேவை புரிய இத்தக் கொடுமையினை [illegible] கண்டு ஒழிக்க எல்லோரும் முன்வரவேண்டும்.

# "அது இன்னமும் பிக்னெல் பாடசாலைதான்"

ஏ. எஸ். கனகரத்தினம்

இந்நூல் ஆசிரியர் புகழ் படைத்த பழைய மாணவர் மட்டுமல்ல; கல்லூரி அதிகார சபையின் உறுப்பினருமாவர். 57 வருடங்களின் வருடாவருட நிகழ்ச்சிகளின் தொகுப்பு 316 பக்கங்களில் அடக்கப்பட்டுள்ளது. படிப்போருக்கு சுவை யூட்டும் வகையில் இது எழுதப்பட்டுள்ளது.



கல்லூரி வரலாற்றின் சகல அம்சங்களும் கொண்ட நூல் இது ஆய்வுச்சிறப்புடைய புள்ளி விபரங்கள், ஆசிரியர் குழுவினர் புகழ்பெற்ற பழையமாணவர்கள், வெள்ளிவிழாக்கண்டவர்கள், விளையாட்டு வைபவங்கள், பிரியாவிடைகள், கௌரவிப்புகள், மறைந்தவர் விபரங்கள் மற்றும் சமயோசித சம்பவங்கள் எதிர்பாராத இடங்களில் நகைச்சுவை தரும் வகையில் வரையப்பட்டுள்ளன.

**நூல் விமர்சனம்:**

யாழ்ப்பாணக்கல்லூரி வரலாறு - (ஆங்கிலம்)
ஆக்கியோன்: பிலிப்குலேந்திரன்
சமர்ப்பணம்: வண ஜோன்பிக்னெல்
பிரசுரம்: யாழ்ப்பாணக்கல்லூரி அதிகாரச்சபை.

ஆண்டவனுக்காக எந்நேரமும் பணியாற்றும் பொருட்டு கிறிஸ்தவகுருமார் பக்தி சிரத்தையுடன் காத்திருக்கும் விடயம் நூல் முழுவதிலும் விரவிக் கிடப்பதைக் காணமுடிகிறது. மிகத்தொலைவிலிருந்து இங்கு வந்து எம்முடன் ஒருவராய் வாழ்ந்து, ஒருசிறு அளவிலாவது எமது பண்பட்ட வாழ்வுக்கு ஒளிஊட்டிய அமெரிக்க மிஷனரிமார் வரிசை இந்நூலில் பிரபல இடம்பெற்றிருக்கிறது.

### அரிய முயற்சி

பழைய மாணவர்களில் ஒருவரான பிஷப் குலேந்திரன் ஒருவரே இந்தக்கடினமான முயற்சியை இவ்வளவு திறமையாகவும் நேர்த்தியாகவும் செய்திருக்கமுடியுமென எனக்குப்படுகின்றது.

தமது கல்லூரியின் சமயப் பணிகளில் ஆழமாக மூழ்கிக் கிடக்கும் அதேவேளையில் உற்சாகத்துடனும் அர்ப்பணிப்புடனும் இப்பணியில் ஈடுபட்டிருப்பது மெச்சத்தக்கது. பழைய ஆவணங்களையும், பழைய உதயதாரகை, கல்லூரி சஞ்சிகை ஏடுகளையும் புரட்டிப்பார்த்து குறிப்புகள் எடுத்து இந்த அருமையான சரித்திரத்தைப் படைத்திருக்கிறார்.

பிஷப் குலேந்திரன் 80வயது நிரம்பிய மனிதர் என்பதையும், இத்தவயதில் அனேகமானவர்கள் குறைந்த வேலையும் கூடிய ஓய்வையுமே நாடுவார்கள் என்பதையும் நினைக்கும் போது அபிமானம் அதிகரித்து அதிசயம் உருவாகின்றது.

இந்நூலில் ஏராளமான ஆண்களும் ஒருசில பெண்களும் தோற்றமளிக்கின்றனர். அக்காலத்தில் அவர்களுடன் நேரிற் பழகிய எம்மிற்பலர் நூலில் இவர்களை இனங்காணும் போது மெய்சிலிர்க்கின்றது.

### ஆசிரியரின் தியாகம்

ஆசிரியர்கள் எவ்வித சாதாரணமானவர்களுக்கும் அன்புடன் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். அவர்களின் ஒன்றுபட்ட ஆக்கமே யாழ்ப்பாணக் கல்லூரி. ஒருகல்லூரியின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அதன் தலைவரும் மற்றும் ஆசிரியர்களும் ஆற்றிய தியாகசேவையைப் பொறுத்தே அமையும் இந்த உண்மை நூலில் தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது. யாழ்ப்பாணக் கல்லூரியின் கீர்த்தி அதன் ஆசிரிய குழாமின் வரலாற்றில் வெளிப்படுகிறது.

### ஒருதலைப்பட்ச கருத்து

முழுமையாக நூலைக் கவனிக்குங்கால், எங்கும் ஒருதலைப்பட்சமான கிறித்தவ சாயல் இழையோடுகிறது. இது ஒரு கிறித்தவகுருவானவரின் முயற்சியென்ற முறையில் அதனை பொருட்படுத்துவது நியாயமாகாது. என்றாலும் சற்று அழகற்றதாகவே காணப்படுகிறது. வேற்றுமத பாடசாலைகளின் கல்வித்தரத்திலும் கிறித்தவ பாடசாலைகளின் தரம் மேம்பட்டதென்ற அனாவசியமான கருத்து அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

குறிப்பாக பெரும்பாலானோர் — பழையமாணவர்கள் இன்றைய மாணவர்கள் கணிசமான ஆசிரியர்களும் கூட வேற்றுமதத்தவராகையால் இக்கருத்து அவர்களுக்கு வேதனை அளிப்பதாகும். கல்வியைப் பொறுத்தளவில் இது செல்லாக்காசு எனலாம்.

### கிறீத்தவ கல்வி

1944-ம் ஆண்டு அதிபர் பங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையின் சிலகருத்துக்கள் வருமாறு:

''எமது சகல தொண்டுகளிலும் மனிதவாழ்க்கைக்கான கிறித்தவ வியாக்கியானங்களை வழங்குவது நமது நோக்கமாக விருக்கின்றது. (பக்கம் 107) மேலும் 169-ம் பக்கத்தில் ''—— கிறித்தவகல்வியை ஊட்டுவதே எமது அடிப்படைநோக்கம்'' (ஆசிரியர்)

தெளிவான மொழியில் சொல்லுவதானால், இவையெல்லாம் எதனைக் குறிக்கின்றன?

கிறித்தவ வியாக்கியானம், என்று ஒன்றும் இந்து வியாக்யானம் இன்னொன்றும், பௌத்த வியாக்கியானம் என்று பிறிதொன்றும் உண்டா?

கல்லூரி உரிமையாளர்கள் தம் ஒருதலைப்பட்ட கொள்கைகளை பாடசாலைகளில் புகுத்தி அவற்றைக் கல்வியென்று கூறிக்கொள்வதை நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்?

கிறித்தவத்திலும் பல்வேறு சபைகளுக்கிடையிலும் கூட வாழ்க்கை பற்றிக்கிறித்தவ வியாக்கியானம் குறித்து இணக்கம் கிடையாது.

வாழ்க்கை பற்றி வியாக்கியானங்களைவிட்டு கல்வி போதிப்பதிலே அதாவது மத

(5-ம் பக்கம் பார்க்க)

## "கம்பன் கழகத்தாய் கண்ணீர் வடிக்கின்றாள்!"



செந்தமிழின் செழுஞ்சுவையைச் சிறப்புடனே
மாணவர்க்கு,
சிந்தனையிற் படவுரைத்த பழம்புலவா!
பைந்தமிழின் கவிச்சுவையைப் பாங்குடனே
மக்களுக்கு
பசியாறப் படைத்திட்ட கவிவலவா!
சொந்தமென நமையணைத்துச் சொர்க்கமென
[illegible] வாழ்ந்திருந்து
சுகமாகக் கதைசொன்ன ஆறுமுகனே!
இந்தவொரு விதமாக ஏங்கித்தான் நாமழவே
எம்முறவை நீ மறந்த தேனையா!

வேறு

கம்பன் கவியரங்கில் கவிசொல்ல நீர் வந்தால்
தம்முள் மகிழ்ந்திடுவான் தரணியிலே தமிழன்னை!
எம் பின் குதித்திடுவீர்; ஏங்கிடுவீர்; இருந்தழுவீர்;
உம்மை மறந்திடுவீர்; உணர்ச்சிகளின் வடிவாவீர்!

அம்மா இவராலே அருந்தமிழும் வாழுமென
நம்பி யிருந்தாளே! நடுவழியில் நீர்போக
வெம்பி மனம்நொந்து வேதனையும் மிகவடைந்து
கம்பன் கழகத்தாய் கண்ணீர் வடிக்கின்றாள்!

ஆக்கம்; — கவிஞர் அ. குமரன்

[வித்துவான் திரு, சி. ஆறுமுகம் அவர்களின் மறைவிற்குக் கம்பன்கழகத்தினரது அஞ்சலி]

# தபக்கால ஆரம்பத்தின் சிறப்பு

மனிதகுலம் மாண்புற்று ஈடேற்றம் அடைய மனுஉரு எடுத்தார் எம் இயேசுக் கிறிஸ்து. தமது வாழ்வில் வெறும் சொல்லிலட்டும் நின்றுவிடாமல் செபத்திலும் தபத்திலும் வல்லமைகொண்ட செயல்களிலுமே மேலோங்கி நின்று ஈற்றில் தம்மைத் தாமே மெழுகாக்கி எம்மை மீட்படையச் செய்தார். கிறிஸ்தவன் கிறிஸ்தவன் எனப்

## செல்வி ராமா

பெயர்கொண்டு வாழும் எங்கள் ஒவ்வொருவரிலும் கிறிஸ்துவே குடிகொண்டுள்ளார் என்பதை உணர்ந்தவர்களாக கிறிஸ்து காட்டிய வழியில் செல்லவேண்டும். அப்போதுதான் நாம் இயேசுவின் அன்புக்குரிய சீடர்களாக முடியும் என்பதை, "என் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்பவனே என் சீடனாவான்" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இறைமகன் இயேசுக்கிறிஸ்துவின் சீடர்களாகும் பேற்றைப் பெற்ற நாம் தபத்தின் ஆரம்பநாளான இன்று அனைவரின் நெற்றியிலும் பூசப்படும் சாம்பலை ஒரு சாதாரண நிகழ்ச்சியாகக் கருதாமல் மகிமையும் மகத்துவமும்கொண்ட எம் அண்ணல் கிறிஸ்துநாதர், நாற்பது நாட்களாக வனாந்தரத்தில் உபவாசம் கொண்டு தபத்திலே நிலைத்திருந்ததைக் கிறிஸ்தவர்களாகிய நாமும் எம்வாழ்விலே கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய இச்சாம்பலினால் எம் ஒவ்வொருவரின் நெற்றியிலும் சிலுவை அடையாளம் வரையப்படுகின்றது. இப்புனித மானசின்னமாகிய சிலுவையே மனுக்குலத்திற்கு விடுதலை அளித்தது. தொடர்ந்து வருகின்ற இந்நாற்பது நாட்களையும் வீணாகக் கழிக்காமல் தபத்திலும் செபத்திலும் தானதர்மங்களிலும் செலவழித்து இறைவனுடன் ஒன்றித்து வாழவேண்டும். இந்த 40 நாட்களும் வேதாகமத்தில் ஓர் முக்கிய இடத்தைப்பெற்றது நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துநாதர் நாற்பது நாள் நோன்பிருந்தார். இறைமக்களான இஸ்ரவேல் வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகளைக் கழித்தனர். சினாய் மலைமீது மோசேயும் 40 நாட்களாகத் தங்கியிருந்தார். நாற்பதுநாட்களாக யோனாஸ் நினிவே மக்களுக்குத் தவம் செய்யப்போதித்தார். இம்முறையைக் கைக்கொண்டே இன்றும் 40 நாட்களை அனுசரித்துவருகின்றனர்.

இதற்கு ஆரம்பமே தவக்கால விபூதிப் புதனன்றே தொடங்கும் வழக்கம் இதையே மக்கள் தெரிந்தும் விரும்பித் திருச்சபையுடன் சேர்ந்து அனுசரித்துவருகின்றனர். இத்தவக்காலத்தில் உள்ளரங்க ஒருமைப்பாட்டைக் காப்பாற்றி இக்காலகட்டத்தை பயனுள்ள முறையில் செலவழிக்க நாம் ஒவ்வொருவரும் பணிக்கப்பட்டுள்ளோம். இதையே திருச்சபைத் தாயும் விரும்புகின்றாள். இன்றிலிருந்து கிறிஸ்துவின் உத்தானம் வரை இறைமகன் கிறிஸ்துவின் சான்றுபகருகின்ற மக்களாக வாழ்வோம்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6.00 | ஆங்கில நிகழ்ச்சி |
| 6.05 | சிறுவர்களின் துணிர நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-30 | இசை நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | கலையரங்கம் (வில்லுப்பாட்டு நிகழ்ச்சி) |
| 7-45 | தகவல் நிகழ்ச்சி |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-30 | நாடக நிகழ்ச்சி |
| 9-05 | சிங்களத் திரைப்படம் |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | (சிங்களத் திரைப் படத்தொடர்ச்சி) |
| 10-30 | உலகச் செய்திகள் |
| 10-35 | [திரைப் படத் தொடர்ச்சி] |
| 11-30 | ஒளிபரப்பு முடிவு. |


## பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

பின்வரும் பாடங்களுக்கும் பயிற்சிக்கும் எமது அடுத்த வகுப்புகள் செய்முறை நெறிமுறையுடன் 10-03-84 ஆரம்பமாகின்றன.

| | |
|---|---|
| ★ மெக்கானிக்கல் என்ஜினியரிங் டிப்புளோமா (Diploma in Mechanical Engineering Works) ★ படம் வரைதல் பயிற்சி (Draughtsman Course) | பயிற்சி |
| ★ கடைச்சல் யந்திரம் பயிற்சி (Latheman's Course) | 4 மாதகாலப் பயிற்சி |
| ★ வெல்டிங் - மின் Welding - Arc ★ வெல்டிங் - காஸ் (Welding - Gas) | 6 மாதகாலப் பயிற்சி |
| ★ மின் இணைப்பு (Electrical Wiring) ★ நீர் குழாய் இணைப்பு (Plumbing) | ஒருமாத காலப்பயிற்சி |
| ★ ஆங்கில வகுப்புகள் (Spoken English) | |

இந்நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் 8-3-84க்கு முன் விண்ணப்பிக்கவும். மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள்

பதிவாளர்

பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

59, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.


# அது இன்னமும் பிக்னெல் ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்பற்ற கல்விப் போதனையில் ஈடுபடுவதால் நமது பாடசாலைகள் இன்னும் சிறந்த சேவையாற்ற முடியுமல்லவா? மதசார்பற்ற கல்வி அறநெறிக்கு முரண்பட்டதல்ல, நாம் இங்கு குறிப்பிடுவது ஒரு கிறித்த குறைபாடுமட்டுமல்ல; இதேவிதமாக இந்துக்கள் பேசுகிறார்கள்; செயற்படுகிறார்கள்; மற்றவர்களும் இப்படியே.

சற்றே விலகி இதனை விளக்குங்கால் யாழ்.பல்கலைக்கழகத்தின் சின்னமாக விளங்கும் நந்தியும் இந்துக்களுக்குரிய விளக்கும் அங்குள்ள இந்துக்கள் அல்லாத மாணவர்களை அவமதிக்கும் செயலாகும் அந்தச்சின்னமானது பிறமத மாணவர்களைப்பார்த்து "நீங்கள் எம்மைச் சேர்ந்தவர்களல்ல" என்று கூறுவது போல் அமைந்திருக்கிறது.

ஒருதகப்பன் தன்னுடைய பிள்ளையின் பாடசாலையைத் தேர்ந்தெடுக்கும் போது இங்கு படித்தால் எனது பிள்ளை பல்கலைக்கழகம் செல்வானா என்று தன்னைக்கேட்டுக்கொள்கிறான். கிறித்தவக் கல்வியோ அல்லது பெந்துக்கோஸ்து கல்வியோ என்பது சிந்திக்கவல்ல பெற்றோருக்கு வெளி அடையாளம் (label) போலிருக்கும்.

தற்பிரஜைகள் எல்லாப்பாடசாலைகளிலிருந்தும் உருவாகிறார்கள். கூடாதவர்களும் அவ்வாறே, ஆசிரியர்கள் தமது மாணவர்களை எவ்வாறு உருவாக்குகின்றனர் என்பதற்கும் புனிதவேத வாக்கியங்கள் அல்லது வேறு எந்தத்திவ்விய நூல்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை. அவ்வாறுயின் ஏன் இந்த கிறித்தவக் கல்வி பற்றிய பிடிவாதம்?

நான் எனது பன்னிரண்டாம் வயதில் ஒருசைவசிகிறித்தவக்குடும்பத்திலிருந்து கிறித்தவனாகவே யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ந்தேன். எனது இருபது வயதில் பெருமளவிற்கு ஒருநாஸ்திகப்போக்குடையவனாக வெளியேறினேன். இன்று அது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

காலஞ்சென்ற ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள் நூலாசிரியரின் நீண்டகால நண்பர் அவரைப்பற்றி மிக இனிமையான சிலகருத்துக்கள் நூலில் இடம் பெற்றுள்ளன. — பழைய மாணவர்களில் மிகச்சிறப்புப் பெற்றவரும் பெருமதிப்புடன் நினைவுகூரப்படுபவருமானவர். அப்பெரியார் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வந்து சேர்ந்தார். அங்கு பலவருடங்களாக — சுமார் நாற்பது — மாணவராகவும் ஆசிரியராகவும் இருந்து பின் ஒரு இந்துவாகவே வெளியேறினார். இந்துக்களான பல சந்ததியினர் இங்குவந்து கல்வி பயின்று இந்துக்களாகவே வெளியேறினர். அவ்வாறாயின் யாழ்ப்பாணக் கல்லூரியில் நாம் பெற்ற கிறித்தவ கல்வி எங்கே? கல்வியில் அவ்விதனுசு ஒன்று உண்மையில் இருக்கின்றதா?

1977 - ம் ஆண்டு வரைக்கும் பதவிக்கு வந்த நமது பிரதமர்கள் அனைவரும் வேறுபல அரசியல் தலைவர்களும் கிறித்தவப் பள்ளிகளில் கல்வி பயின்றவர்களே. கடந்த 30 ஆண்டுகளாக அவர்கள் நாட்டுக்காற்றிய பணியைக்கணிக்க முடியுமானால் கிறித்தவக்கல்லூரி என்றழைக்கப்படும் அந்தமாணிக்கத்தின் மதிப்பு சோதனைக்குள்ளாகும்.

பிரதமர்கள் இருவர் இந்நூலில் சற்றுக் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

### இலவசக் கல்வி

டாக்டர் கன்னங்கரா தமது இலவசக் கல்விமுறைக்காக வெகுவாகக் கண்டிக்கப்படுகிறார்.

"சகலருக்கும் இலவசக்கல்வி அளிக்கப்பட வேண்டுமென அவர் விரும்பியிருக்கக்கூடும்.

ஆனால் அவரைத் தூண்டிய பெருவிருப்பு அதுவல்ல அவரது ஆசையெல்லாம் மதசார்புடைய பாடசாலை அமைப்பில் கிறித்தவமிஷனரிமாரின் செல்வாக்கினை வேரோடு களைந்துவிடவேண்டுமென்பதே" (பக்கம் 106) இது டாக்டர் கன்னங்கராவுக்கு எதிரான கண்டனம் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மதசார்புடைய பாடசாலை முகாமையாளர்களால் ஆசிரியரின் சம்பளத்தில் ஒருபகுதி தொடர்ந்தும் கறந்தெடுக்கப் படவேண்டுமென்றோ அல்லது ஏழைச்சிறுவர்கள் வெறும் கொட்டில்களில் வைத்துப் படிப்பிக்கப்படவேண்டுமென்றோ கல்வியில் உயர்ந்த இக்குருவானவர் கருதியிருந்திருக்கலாகாது.

### கல்லூரி சுவீகரிப்பு

யாழ் பல்கலைக்கழகத்துக்காக கல்லூரியின் ஒருபகுதியும் நூலகமும் எடுக்கப்பட்டது பற்றி ஒருவித ஆத்திரம் தொனிக்கிறது. இதனை ஒரு மோசடியென்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது. சுவீகரிக்கப்பட்ட சொத்து யாருக்கு மிக அவசியமாகத் தேவைப்பட்டது? பல்கலைக்கழகத்துக்கா? அல்லது கல்லூரிக்கா? இதிலிருந்து இன்னொரு அடிப்படைக் கேள்வி பிறக்கிறது. "ஒருநாட்டின் பாடசாலைகள் யாருக்குச் சொந்தம்"? என்பதே அது.

அது எவ்வாறாயினும், தேவைக்கென எடுக்கப்பட்ட கல்லூரிச் சொத்து தேவை பூர்த்தியானதும் திருப்பிக் கொடுக்கப்பட்டிருப்பதாக், அது பற்றிய அனுங்கிய ஆராய்ச்சி இன்று பலனளிக்காது.

மீட்கப்படாத கல்லூரியின் பூரண அமைப்பு இன்றைய நிலையில் கல்வித் தொண்டுக்கு உகந்த வழியில் செயற்படும் ஆலோசனைகள் நூலுக்கு மிகப் பொருத்தமாயிருந்திருக்கும்.

### பிக்னெல் நினைவு வெளியீடு

இந்த நூல் அதிபர் பிக்னெல் அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு. அந்த மாமனிதன் மக்கள் மனதைப் பறித்திருந்த மாயமும், அவருடைய செல்வாக்கின் மகிமை பற்றியகுறிப்புக்களும் நூலில் ஆங்காங்கே பளிச்சிடுகின்றன. ஆனால் 72—74பக்கங்களில் அவருடைய வாழ்வையும், பணியையும் ஆட்சிபுரிந்த நோக்கங்கள் பற்றிய ஆழமான விமர்சனமும் காணப்படுகிறது. அவருடைய ஆளுமை, குணம், மேதாவிலாசம் ஆகியவற்றின் பின்னணியில் உருவான கோட்பாடுவின் ஒரு அழகிய தொகுப்பெனக் கொள்ளலாம்.

### இனிய முடிவு

இவ்வரிய நூலுக்கும், எமக்கும் ஒரு உந்து சக்தியாகத் திகழும் பேரதிபர் பிக்னெல் அவர்களுக்கு புகழ்பாடும் வகையில், நூலின் இறுதிப்பகுதி இசை நயத்தின் உச்சத்தை எட்டுமளவிற்கு மிளிர்கின்றது. அதனை முற்றாக இங்கு தருவதே மிகப்பொருத்தமாகும்.

"அவரை அறிந்தவர்களைப் பொறுத்தளவில் அது இன்னமும் பிக்னெல்பாடசாலைதான். பாடசாலை நிர்வாகம், அதன் வாழ்க்கை, ஆசிரியர், மாணவரின் நடத்தை ஆகிய யாவற்றிலும் அவர் தமது புருஷலட்சணத்தை பதித்து விட்டிருக்கிறார். அவருக்குப் பின்வந்தவர்களும் பெரும்பாலும் அவர் விட்டுச் சென்ற அருஞ்செல்வத்திலே வாழ்ந்திருக்கின்றனர் இங்கிருந்து வெளியேறுபவர்களும், தெரிந்தோ தெரியாமலோ அவருடைய லட்சியங்களின் தாக்கத்தை அனுபவித்த பண்பாளர்களாகக் காணப்படுகின்றனர்; அந்த அளவிற்கு கல்லூரியை அவர் நேசித்தார்; அவருக்கு முன்னரோ பின்னரோ வேறெவரும் அவ்வாறு நடந்துகொள்ளவில்லையென்பதால் அதன்வாழ்வில் இன்றும் மிக ஆழமான அம்சம் அவர் பதித்த முத்திரையே எனவே அவர் மறைந்து பல ஆண்டுகளாகிவிட்டபோதிலும், பிக்னெல் சாப்தம் இன்னமும் முடிவடையவில்லையென்று சொல்லலாம். கல்லூரி மீது அவர் ஜெபித்த மந்திரசக்தி இன்றும் தொடர்கிறது.

தமிழ்: பி. எஸ்.பி.

## கிளிநொச்சி நீதவானின் இடமாற்றம் ரத்து

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி நீதிமன்ற நீதவானாகக் கடமையாற்றி, மூதூருக்கு இடமாற்றம் பெற்ற நீதவான் திரு. நா.த. கதிரவேற்பிள்ளையின் இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.


இவர் தொடர்ந்தும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் நீதவானாகக் கடமையாற்றிவருகிறார். (மா)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் செல்லத்துரை கந்தசாமி

(இ. போ. ச. சாரதி, கோண்டாவில்)

தோற்றம்: 22-06-1936 மறைவு: 06-02-1984




எமது குடும்பத் தலைவர் எம்மைவிட்டுப் பிரிந்து 31நாளாகும் இன்று அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவரது அறிவுரைகளைப் போற்றி அதன்வழி நடக்கஅருளுமாறும் இறைவனைப்பிரார்த்திக்கிறோம். அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (7-3-84 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அவரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் இந்த அழைப்பை ஏற்று அந்தியேட்டிக் கிரியைக்கும் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி (க. புனிதவதி), சகோதர சகோதரிகள், மற்றும் குடும்பத்தினரும்.

"சைலஜினி வாசம்",
[illegible] வீதி,
மீசாலை தெற்கு, மீசாலை. 1197

# எமது வட்டிவீத அதிகரிப்பு உங்கள் வருவாயை அதிகரிக்கிறது.




எமது வட்டிவீதங்கள் உடனடியாக மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உங்கள் முதலீட்டிற்குக் கிடைக்கும் அதிகவருமானம் நீங்கள் மகாராஜா முதலீட்டு நிறுவனத்தில் முதலீடு செய்வதற்கு மேலும் வலுவான காரணமாகிறது. அதேவேளை உங்கள் பணம் பாதுகாப்பான நிதிவளம் மிக்க நிறுவனமொன்றில் வளர்கிறது என்பதும் இன்னுமொரு காரணமாகிறது.

வட்டிவீதங்கள் (வருடாந்தம்)*

| காலம் | ரூ 500முதல் ரூ99,999 வரையான வைப்புக்கள். மாதாந்தம் | முதிர்வில் | ரூ 100,000வும் அதற்கு மேலான வைப்புக்களும். மாதாந்தம் | முதிர்வில் |
|---|---|---|---|---|
| 3 மாதங்கள் | - | 19% | - | 19% |
| 6 மாதங்கள் | - | 20% | - | 21% |
| 12மாதங்கள் | 20% | 23% | 21% | 24% |
| 18மாதங்கள் | 21% | 24% | 22% | 25% |
| 24மாதங்கள் | 22% | 26% | 23% | 27% |
| 30மாதங்கள் | - | 27% | - | 28% |
| 36மாதங்கள் | - | 30% | - | 30% |

*வட்டி வீதங்கள் மாற்றத்திற்குரியன. வைப்புக் காலத்தில் நடைமுறையிலிருக்கும் வட்டி வீதமே வழங்கப்படும்.

## மகாராஜா முதலீட்டு நிறுவனம்

கூட்டிணைக்கப்பட்டது 23 9 1973
வியாபார நிலயம்:
347 யூனியன் பிளேஸ்,கொழும்பு 2.
தொலைபேசி: 34133/23130/29747

பதிவு அலுவலகம்:
இலங்கை செக்ரடேரியட் சேர்விஸ் லிமிட்டெட் 64, கெய்சர் வீதி
கொழும்பு 11.

கிளை அலுவலகம்:
122 கே. கே. எஸ், வீதி யாழ்பாணம்.
தொலைபேசி: 021 - 24267.

பிரதான வியாபாரத்துறைகள்

நிலையானவைப்புச் சேகரித்தல், குத்தகை, கைத்தொழில் போன்ற வேறு துறைகளுக்கான இயந்திர, மூலப்பொருள் இறக்குமதிக் கடன்வசதி, பெயர்பெற்ற தரமான பொருட்கள் இறகுமதி, ஈடு, அடமானக்கடன், வர்த்தக வாகனங்களுக்குக் கடன்வழங்கல், காப்புறுதி முகவர்.

பணிப்பாளர் சபை.

திரு ஆர்.மகாராஜா, முகாமைப் பணிப்பாளர்
திரு ஆர்.இராஜமகேந்திரன், முகாமைப்பணிப்பாளர்
திரு வி. என். குமாரசுவாமி, FCA (Eng & Wales), ATII (Eng), MInst AM (Eng), AMBIM (Eng) FCA (Cey)
கலாநிதி. எம். ஏ, பெர்னுண்டோ, Phd (Cantab)
திரு பி. மகிந்தா, BSc (Hons), FBIM (Eng)
திரு வி.சண்முகம், LLB (Lond) Hons, AIB (Lond) Attorney-at-Law
திரு டபிள்யூ. பஸ்நாயகா, MBIM (Eng), நிருவாகப் பணிப்பாளர்
திரு சி. சிறீநம்முனி, MBIM (Eng), ACMA

மகாராஜா முதலீட்டு நிறுவனத்தின் நிதிச்செயற்பாடு

| | 1980/81 ரூ. | 1981/82 ரூ. | 1982/83 ரூ. |
|---|---|---|---|
| பங்குமூலதனம் | 750,000 | 1,585,900 | 2,585,900 |
| ஒதுக்கம் | 2,835,255 | 11,175,062 | 13,701,040 |
| மொத்தப் பங்குதாரர்-நிதி | 3,585,255 | 12,760,962 | 16,286,940 |
| வைப்புக்கள் ** | 66,938,481 | 78,102,511 | 113,732,001 |
| வங்கி இருப்பு | 8,973,105 | 12,812,856 | 16,291,978 |
| பொறுப்புக்கள் | 5,139,382 | 1,513,556 | 7,344,829 |
| வைப்பாளர்களுக்கு-வட்டிவழங்குமுன் இலாபம் | 13,779,850 | 18,691,833 | 25,343,400 |
| வரியிறுக்குமுன் லாபம் | 1,946,188 | 2,454,490 | 3,634,085 |
| வரியிறுத்தபின் லாபம் | 1,629,687 | 1,084,490 | 2,689,045 |
| பங்கிலாபம் | 187,500 | | - |

** 1983 டிசெம்பர் 31ம் திகதிவரை வைப்புக்கள் 14.5 கோடி ரூபாய்களுக்குமேல்

HTL MI 1419


# இன்றைய பலன்

ரக்ஷி மாதம் 24-ம் திகதி (7—8—84) புதன்கிழமை

மேடம்:- ஆத்திரப் போக்கு அருமையான சந்தர்ப்பத்தை இழப்பதற்கு இடமளிக்கும் வேண்டியவர்களைப் பகைத்துக் கொள்வீர்கள் மேலதிகாரிகளுடன் மோதலைத் தவிர்த்துக் கொள்ளவும்.

இடபம்:- மேடைப் பேச்சாளர்கள் பெரும்புகழுடைவர். நாடகக் கலைஞர்களுக்கு நன்மையான தினம் இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு சிறப்பான தினம்.

மிதுனம்:- துஷ்டர்கள் உறவு உங்களைச் சங்கடத்தில் மாட்டி வைக்கும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு வழக்கு விவகாரங்களில் கவனம் வேண்டும் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

கடகம்:- இதயத்தைத் தொடும் சம்பவம் இடம் பெறும் சிலருக்குப் புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

சிங்கம்:- தெளிந்த மனம் தெய்வசிந்தனை தேடியது கிடைக்கும் அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு இறைநம்பிக்கையுடன் இல்லத்தில் அமைதிதவழும்-

கன்னி:- உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும் தொழில் துறையில் முன்னேற்றத்திற்கும் சதி நடைபெறலாம். அசாத போசனத்தின் மூலம் வயிற்றுக்கோளாறு ஏற்பட முடியும்.

துலாம்:- பசுமையான சம்பவம் நடைபெறும் களவிற வழியால் நன்மைகள் கிடைக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும் காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்குக் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

விருச்சிகம்:- பிரச்சினைகள் மேலும் சிக்கலாகும் உணவு விடயத்தில் பிரியக் குறைவு தென்படும் கர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருப்பது நன்று உடல்நலனில் அதிகம் கவனம் வேண்டும்.

தனுசு:- மனம் போல் வாழ்வு இன்று மலரும் கடமையாற்றுமிடத்தில் சகதொழிலாளர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும் சிலருக்கு பதவி உயர்வுகளுக்கும் இடமுண்டு முயற்சியால் முன்னேற்றம் உண்டு.

மகரம்:- புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும் தொழில் துறையில் புதியசாதனை உருவாகும் கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும் இடமாற்றத்திற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம்.

கும்பம்:- வியாபாரங்கள் மூலம் இலாபம் கிடைக்கும் புத்திரர்களுடைய செல்வாக்குப்பெருகும் புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும் பூமியால் முன்னேற்றம் உண்டு.

மீனம்:- வார்த்தையில் பழுதுண்டு பகைவர் காத்திருப்பர் செலவினங்கள் எளிதாகும் சிறுதாகவே இருக்கும் சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம் உணவு விஷயத்தில் கவனம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை வே. ரவிந்திரன்

## யாருடையது?

மன்னூர் சின்னக்கடையைச் சேர்ந்த திரு ச தசகுமாரன் என்பவர் பண்டத்தரிப்பு - சில்லாலையைச் சேர்ந்த திரு. கப்பையா ஜெகதீஸ்வரன் என்பவரின் அடையாள அட்டையை மன்னூரில் கண்டு எடுத்து "ஈழநாடு" அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

# சைக்கிள் திருட்டுக்கள் அதிகரிப்பு!

(கண்டிக்குளி)

யாழ். நகரில் அண்மைக் காலமாக சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துவருகின்றன.

யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளை முன்பு சைக்கிளை, பூட்டிவைத்துவிட்டு அங்கு கருமத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்த போது சைக்கிள்விட்ட இடத்தில் காணமல் போன அனுபவம் கிளிநொச்சியைச் ஒருவருக்கு ஏற்பட்டது கிளிநொச்சி எட்டாம் வாய்க்காலைச்சேர்ந்த எஸ். யோகராசா என்பவர் இதுதொடர்பாக யாழ். பொலிஸில் புகார் செய்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பும் யாழ். பெரியாஸ்பத்திரியிலிருந்து பூட்டிய சைக்கிள் ஒன்றைக் காவி வந்த சைக்கிள்களவு ஆசாமி ஒருவர் ரோந்தில் வந்த பொலிசாரிடம் வகையாக மாட்டிக் கொண்டார். இச்சைக்கிள் திருட்டு சம்பவங்களினால், சைக்கிள் உரிமையாளர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


மனோகரா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். (இருவேடம்)
சரோஜாதேவி - ரத்னா
எங்க வீட்டுப் பிள்ளை
(கலர் - புதிய பிரதி)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
தேவிகா — வீரப்பா
நடித்த
ஆனந்தஜோதி
(புதிய பிரதி)

இன்னும் சில தினங்கள் மட்டும்
றீகல் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15, மேகலா...
திருமதி பாக்யராஜ்...
பயணங்கள் முடிவதில்லை
- வண்ணம் -
Coming
SHAMMI KAPOOR
RAJSHREE...... IN
JANWAR
- Color -
Music - Shankar Jaikishan

ஹரன் (யாழ். நகர்)
சிவாஜி — மஞ்சுளா
உத்தமன்
(புதிய பிரதி)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2-30, 6-0
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
என் அண்ணன்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15 9-30
கமலஹாசன்-மாதவி
டிக் டிக் டிக்
(ஈஸ்ட்மன்கலர்)

லிடோ (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15 9-30
CAPTAIN KRONOSE
EMPIRE HUNTER
(Horror Film)

வெலிங்டன்
தினசரி 10 30, 2-15, 4-45, 7-15, 9-30
Ideal Marriage
Part II
(Strictly for adults)
Every Night of the Week

ஸ்ரீதர் (யாழ் நகர்)
10-30, 2-00, 4-30
7-00 9-30
Bruce Strikes Back

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00 9-00
கமல்— ஸ்ரீதேவி— நடித்த
மீண்டும்கோகிலா
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 P. M.
More Than a Movie An Adventure you never forget
DAMNATION ALLEY
(Color)

VACANCIES
கீழ்க்காணும் துறைகளில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை
1. Welders ஒட்டுனர்
2. Fitters பொருத்துனர்
3. Tinkers உலோக வேலையாளர்
PROMOTERS ENGINEERING COMPANY LTD.
844, POINT PEDRO ROAD, NALLUR, JAFFNA, SRI LANKA. (1074)

PERSONAL CLASSES FOR G. C.E.(A/L) 1984 தூய, பிரயோககணிதம்

| சனி, ஞாயிறு வினாவிடை வகுப்பு | | பகல் நேர வகுப்பு | |
|---|---|---|---|
| 3-00 — 4-00 : | பிரயோககணிதம் | 1-00 : | காவிகள் |
| 4-00 — 5 00 : | தூயகணிதம் | 2-00 : | நுண்கணிதம் |
| ஆரம்பம் : | 10-3-84 | ஆரம்பம்: | 12-3-84 |

TUTOR :-
RAVIMOHAN
No. 74A, மணிக்கூட்டுகோபுரவீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்) (1152)

கேம்பிறிட்ஜ் கல்வி நிலையம், 234, ஸ்ரான்லி வீதி
A/L 84
மீட்டல் வினாவிடை வகுப்புகள்
இன்று ஆரம்பம்
85 சனி, ஞாயிறு வகுப்புகள்
86 ஆரம்பம்: 10-3-84
1192

வடமாகாண உழவு யந்திர உரிமையாளருக்கு
ஓர் நற்செய்தி!!!
உங்கள் தேவைகளை உணர்ந்து உங்கள் உழவு யந்திரங்களையும் அத்துடன் சம்பந்தப்பட்ட மற்றும் உபகரணங்களையும் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்க நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்
'குளோப் டிராக் மாற்' 'GLOBE TRAC MART'
மின் வெல்டிங், காஸ் வெல்டிங் (GAS) கடைச்சல் வேலை, பெயின்ட் அடித்தல் (SPRAY PAINTING)
இன்னும் பல வகையான சேவைகளையும் உங்களுக்கு அளிக்க காத்து இருக்கிறோம்.
★ தேவை ஏற்படின் உழவு யந்திரங்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று (FIELD SERVICE) பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.
கிட்டத்தட்ட 25 வருட அனுபவம் கொண்டவர்களால் இந்த வேலைத்தலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
உங்கள் தேவையை நாடி எங்கள் சேவை
GLOBE TRAC MART
15, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
★ திருநெல்வேலிச் சந்தையிலிருந்து வைத்திய கல்லூரிவழியாக 200 யார் - பழைய கொக்குவில் புகையிரத நிலையத்திலிருந்து 50 யார் தூரத்திலுள்ளது. (1190)

லண்டன் பரீட்சைகள்
I. A. A. — I. B. K.
லண்டன் சேம்பர் ஒவ் கொமர்ஸ் (பிற்ஸ்மன்) பரீட்சை, சர்வதேச கணக்கியல் கணக்காய்வு பரீட்சை, றோயல் சொசயிற்றி ஒவ் ஆட்ஸ் (லண்டன்) பரீட்சை மதுரூஸ் தொழில் நுட்ப பரீட்சை(ஸ்ரெனோ), இன்ஸ்ரியூட் ஒவ் பாங்கேர்ஸ் சுப்பிரிண்ட் ஒவ் ஒடிற்றேர்.
சுருக்கெழுத்து முறைகள்
ஆங்கிலம்: பிற்மன்ஸ், கிரேக், டன்ரன், தப்ளான்ற்.
தமிழ்: பிற்மன்ஸ், சீதாலட்சுமி, ராதாகிருஷ்ணன்.
விசேட வர்த்தக, ஆங்கில வகுப்புக்கள்
அடிப்படை அறிவில்லாதவர்களும் மேற்படி பயிற்சி தெறிவை மேற்கொள்பவர்களும் இப்பயிற்சி நெறியை மேற்கொள்ளலாம்.
Telex (சர்வதேச தொலை தொடர்பு)
க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்திபெற்றவர்கள் தோற்றலாம்.
விபரங்களுக்கு:
பணிப்பாளர், தொழிற் கல்விச் சேவைகள் பிரிவு,
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மீண்டும் சென்னை, ரூபவாஹினி நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கண்டுகளிக்க
உத்தரவாதத்துடன் 'அன்ரனு' பொருத்திக்கொள்ளவும்
மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும்
சகலவித றேடியோ, ரி. வி., டெக், மணிக்கூடுகள் பழுதுபார்த்துக்கொள்ளவும்
வீனஸ் 266/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமை)
நியூ வீனஸ் 69/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு ஏப்ரல் முன் விதை வெங்காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 1500 மெட்ரிக் தொன் விதை வெங்காயம் இறக்குமதி செய்ய, விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது

இதே போல் முல்லைத்தீவுக்கும் வவுனியாவுக்கும் 1300 மெட்ரிக் தொன் விதை வெங்காயம் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்னர் விதைவெங்காயம் வழங்கக்கூடியதாக, இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படி, யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கமும், உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் பி பாலசிங்கமும், யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் திரு. எஸ் சிவமகாராசாவுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த மாதங்களில் யாழ் மாவட்டத்தில் பெரும் மழை பெய்ததால் வெங்காயம் உற்பத்தி செய்தவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளானதைத் தொடர்ந்து, விதை வெங்காயம் இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. (மா)

## இப்படியும் நடக்கிறது

அது ஓர் வர்த்தக நிறுவனம்.

திடீரென இருவர் நுழைகின்றனர்.

தங்களது 'இயக்க'த்தின் பெயரைச் சொல்லி, "இயக்க வளர்ச்சிக்கு நிதி திரட்டி வருகின்றோம், பணம் தாருங்கள்" என்று கேட்கிறார்கள்.

வர்த்தக நிறுவனத்தில் இருந்த ஒருவருக்கு மூளை மின்னல் வேகத்தில் வேலை செய்யத் தொடங்கிற்றுப் போலும்! அதன் எதிரொலி,

"இயக்கத்துக்கா பணம் வசூலிக்கிறீங்க......... கள்ள நாய்களே..." என்று சீறிப் பாய்ந்து நிதி திரட்ட வந்த இருவரையும் மடக்கிப்பிடித்து நல்ல 'சாப்பாடு' கொடுத்து கட்டியும் வைத்துவிட்டார்கள்!

தங்களது 'குட்டு' வெளிப்பட்டு விட்டது கண்டு அதிர்ச்சிக்குள்ளான அந்த இருவரும் தாங்கள் செய்த தவறுக்காக உண்மையைச் சொல்லி காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டதன் பின்னர்தான் இருவரும் விடுதலை செய்யப்பட்டார்கள்!

காதில் விழுந்த செய்தி: அந்த இருவரும் வர்த்தக நிறுவனத்தில் வைத்து புகைப்படம் எடுக்கப்பட்டார்களா?

மேலதிகத் தகவல்: அந்த வர்த்தக நிறுவனம் இருப்பது யாழ். ஸ்டான்லி வீதியில்.

"ஊடுருவி"

## மரண அறிவித்தல்
### வைத்திலிங்கம் தில்லையம்பலம்

(இளைப்பாறிய போஸ்ட்மாஸ்டர் அரியாலை உபதபால் கந்தோர்)

வைத்திலிங்கம் தில்லையம்பலம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற போஸ்ட்மாஸ்டர் பொன்னையாவின் அன்புச் சகோதரரும், பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் லோகபவானி, கோகுலவாணி, கணேசமோகன், ஜெகன்மோகன், கிரிதரமோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் உருத்திரேஸ்வரன், சண்முகம் (C. W. E. கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருபன், தர்மினி, பதுநந்தன், சுவேந்தினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னாரின் பூதவுடல் இன்று 7-3-84 புதன் கிழமை மாலை 4 மணிக்கு அரியாலை, குசலன்மாக் ஒழுங்கையில் இருக்கும் அவரது இல்லத்திலிருந்து சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லபடும்.

1194

## மரண அறிவித்தல்
### திருமதி செல்லையா இரத்தினம்

வரணியூரைச் சேர்ந்த திருமதி செல்லையா இரத்தினம் காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், தங்கரத்தினம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் பத்தர், திருநாவுக்கரசு பத்தர் (நாச்சிமார் கோவிலடி) ஆகியோரின் தாயாரும், கந்தசாமிப்பத்தர் (வரணி), இராஜேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்புமாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (7-3-84) புதன்கிழமை மாலை 3 மணியளவில் நாச்சிமார் கோவிலடி, இராமநாதன் வீதி, 36ம் இலக்க இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு, எடுத்துச் செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சி திருநாவுக்கரசு

1202

## மரண அறிவித்தல்
### கந்தசாமிப்பிள்ளை இராமச்சந்திரன்



முன்னாள் தெல்லிப்பழை கன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் நிர்வாகச் செயலாளரும், தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலையின் நிர்வாக உறுப்பினருமான தெல்லிப்பழை கந்தசாமிப்பிள்ளை இராமச்சந்திரன் காலமாகிவிட்டார். இவர் சீதாதேவியின் அன்புக் கணவரும், சந்திரசேகரன் (F. P. L. சவுதி), மணிமேகலாதேவி, இரவீந்திரன் (Golden Pharmacy) தெல்லிப்பழை), மேனகாதேவி (இங்கிலாந்து), இரவிச்சந்திரன் (சிங்கப்பூர்), உமாதேவி, உசாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி, குலசிங்கம் (சேவையர், ஒட்டிசுட்டான்), ஜெயவதி, விஜயகுமாரன் (லண்டன்), ஜெதீஸ்வரன் (சீமெந்து கூட்டுத்தாபனம்), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற டாக்டர் ஹரிலிங்கம் ஆதலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [7-3-84] புதன்கிழமை காலை பத்து மணியளவில் தெல்லிப்பழை இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொத்தியால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

1189

## யாழ். புதிய உதவி கூட்டுறவு ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புதிய உதவி கூட்டுறவு ஆணையாளராக ஜனாப் எம். சி. எம். இக்பால், தவியேற்றுள்ளார். இதற்கு முன் இவர் மன்னார் உதவி கூட்டுறவு ஆணையாளராகக் கடமையாற்றினார்

இவர், நீதியரசர் எச். டபிள்யூ. தம்பையாவின் அந்தரங்கச் செயலாளராகக் கடமையாற்றி அதன் பின்னர் வெளிநாட்டு சேவையிலும் பணியாற்றினார். பின் மன்னார் உதவி கூட்டுறவு ஆணையாளராக நியமிக்கப்பட்டார். (உ)

## ஜனதா தலைவர் சந்திரசேகர்

(புதுடில்லி)

ஜனதாக் கட்சியின் தலைவராக திரு. வி. சந்திரசேகர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவர் பதவிக்கு இவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. சுப்பிரமணியசாமிஸ் திரிகளுக்கும் இவருக்கும்பலத்த போட்டி நிலவியது. (ஓ)

## சந்தேகநபர் கைது

(மட்டுவில்)

முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் சுவாம்பிள்ளை டொன் பொஸ்கோ மரணம் தொடர்பாக பொலிசார் சந்தேகநபர் இருவரைக் கைதுசெய்துள்ளனர்.

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த டொன்பொஸ்கோவின் சடலம் முகமாலையிலுள்ள பற்றை ஒன்றுக்குள் கண்டுபிடிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி திரு எஸ். தர்மேந்திரன் பகிரங்கத் தீர்ப்பளித்து புலன் விசாரணைசெய்யும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டிருந்தார். இதைத் தொடர்ந்து பொலிசார் விசாரணையில் ஈடுபட்டு சந்தேகத்தின்பேரில் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த கதிரவேலு, இராசதுரை ஆகியோரைக் கைதுசெய்து சாவகச்சேரி நீதவான் என். யோகலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதவான் அவர்களை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். (க)

## பல்கலைக்கழக மாணவன் விடுதலை

[யாழ்ப்பாணம்]

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் விரசிங்கம் வசந்தன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை மாணவன் விரசிங்கம் அவன் வெட்டியில் உள்ள வீட்டில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார்.

இவரை விடுதலை செய்யும்படிகோரி யாழ் பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவர் திரு க ஸ்ரீஸ்கந்தராசா, பலாலி இராணுவமுகாம் பொறுப்பதிகாரியுடனும், யாழ் பொலிஸ் அதிபர் ரி இ. ஆனந்தராசாவுடனும் தொடர்பு கொண்டிருந்தார். [கா]

## நகரில் பரபரப்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தசமயம், வெளியில் மூன்று இளைஞர்கள், துப்பாக்கியுடன் நின்று, எவரையும் உள்ளே செல்லவிடாது எச்சரித்துக்கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

சாமான் வாங்க வந்த ஒருவர் உள்ளே செல்ல முற்பட்ட போது துப்பாக்கியைக் காட்டி, இளைஞர் தடுத்ததாகவும் கூறப்படுகிறது. சம்பவத்தின் பின் சைக்கிளில் இளைஞர் சென்றதை, யாழ் ஆஸ்பத்திரிக்கு நோயாளரைப் பார்க்க வந்திருந்த நூற்றுக்கணக்கானோர் பார்த்துக்கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

### அவசர சத்திர சிகிச்சை

சங்க ஊழியர்கள் உடனடியாக, முகாமையாளர் திரு. குமாரசுவாமியை யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். உடனடியாக அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. எக்ஸ்ரே ஒன்று எடுக்கப்பட்டதாகவும், இருதயமும், சுவாசப்பையும், சேதப்படவில்லையென்றும், ஆபத்தில்லையென்றும் இடதுபக்க விலா எலும்புக்கு கீழ் ஒரு சூடு பட்டுள்ளதாகவும், ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன சத்திரசிகிச்சை அறைக்கு வெளியில், சூட்டுச் சம்பவத்தைக் கேள்விப்பட்டு சங்க ஊழியர் உட்பட பலர் திரண்டிருந்தனர். ஐக்கிய வியாபார சங்கத்தின் முன்னும் பெருந்திரளானோர் கூடியிருந்தனர்.

சங்க பொது முகாமையாளர் திரு. குமாரசாமி, முன்பு யாழ்ப்பாணம் ஒட்டோர்ஸ் லிமிட்டட்டிலும் நீண்டகாலம் பணியாற்றியவராவர்.

யாழ். ஐக்கிய வியாபார சங்கத்தில், முன்பு ஒரு தடவை கொள்ளை முயற்சி நடந்து, அது தோல்வியில் முடிவடைந்தது. [க]

## வடக்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'71ல் நடைபெற்ற கிளர்ச்சியைப் போலல்ல இது மிகவும் பாரதூரமானது. வடக்கு கிழக்கில் நடப்பது தனிநபர் பயங்கரவாதம். பொலிஸாருக்கும் ஆயுதப்படையினருக்கும் எதிராக இது நடக்கிறது.

## ஊழியர்களின் விபரத்தை பொலிசார் திரட்டுகின்றனர்

(இரா. உதயகுமார்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச திணைக்கள, கூட்டுத்தாபன ஊழியர்களின் பெயர், விபரங்களைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு பொலிஸ் பகுதியினர் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஒவ்வொரு ஊழியர்களினதும் பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம் போன்ற விபரங்களை மட்டக்களப்புப் பொலிசாருக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

நீண்டகால லீவில் சென்றுள்ள ஊழியர்களின் லீவிற்கான காரணங்கள்பற்றிய விபரப் பிரதியையும் பொலிசார் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. (கு)

## அரசியல்வாதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் ஜயசேகராவின் மகனுடன் குறித்த அரசியல்வாதியின் மகள் இரகசியமாகச் சென்றுவிட்டதின் விளைவாகவே இத்தகராறு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## விவசாயப்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நான்கு மாத விவசாயபயிற்சி பெற சுமார் 150 பேர் விண்ணப்பித்துள்ளதாக விவசாயப் பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி திரு. ஏ. அரியகுட்டி நேற்றுத்தெரிவித்தார்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை நடைபெறவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்தும் வேறு சில மாவட்டங்களிலிருந்தும் இப்பயிற்சிக்கு விண்ணப்பித்துள்ளனர். பயிற்சி ஏப்ரல் மாதம் 15ம் திகதி ஆரம்பமாகி நாலு மாதங்கள் தொடர்ந்து நடைபெறும். (க)

"இந்தியா, இந்தாலி மலேசியா போன்ற நாடுகளில் நடப்பது போலத்தான் இங்கும் நடக்கிறது. அந்த நாடுகள் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தாலும் கட்டுப்படுத்த முடியவில்லை" [ஓ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1984—ம் ஆண்டு மார்ச் மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 .Eelanadu-P. O. Box 49. Telegram: Eelanadu, Telephone: 22389—24126